சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. **Hmop. 132/2022**

2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ம் நாள் வெள்ளிக்கிழமை

மனுதாரர் தரப்பு சாட்சியாகிய ம.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.சித்ரா, கிரேட் 2 பென்ஞ் கிளார்க் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திகேயன் | தொழில் | |
| தந்தைபெயர் | வெங்கடேசன் | ஜாதி | |
| கிராமம் | கீழ்நகர் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**11.08.2023 முதல் விசாரணை**

நான் மேற்கண்ட வழக்கில் மனுதாரர் ஆவேன். எதிர்மனுதாரர் என் மனைவி ஆவார். நான் விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானது தான். என்தரப்பு சான்றாவணங்களாக, 17.02.2016 தேதியிட்ட அசல் திருமண அழைப்பிதழ் **ம.சா.ஆ.1,** மனுதாரரும் எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட திருமண புகைப்படம் **ம.சா.ஆ.2**, 07.09.2017 தேதியிட்ட நித்திக்ஷா பிறப்பு சான்று நகல் அசல் ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டுநகல் **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 09.02.2019 தேதியிட்ட அனுஸ்ரீ பிறப்பு சான்று நகல் அசல் ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டுநகல் **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.02.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **ம.சா.ஆ.5**, திருப்பப்பட்ட அஞ்சலக உறை **ம.சா.ஆ.6,** ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டு நகல் **ம.சா. ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாக்கல் செய்கிறேன். மனுவில் கோரியுள்ளவாறு உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.